<table>
<tr><td colspan="3">இராணிப்பேட்டை நகராட்சி</td></tr>
<tr><td colspan="3">2025ம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் தேதி வெள்ளிகிழமை நண்பகல் 10.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்</td></tr>
<tr><td></td><td>வரிசை எண், மற்றும் மன்ற கூட்டப்பொருள்</td><td>மன்றத்தின் தீர்மானம்</td></tr>
<tr><td>17.10.2025</td><td><u>பொருள் எண். 1</u><br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2025 ஆம் மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.1193/2022/சி1</td><td>தீர்மானம் எண், 953<br>அலுவலகக்குறிப்பு<br>பார்வையிடப்பட்டு<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>17.10.2025</td><td><u>பொருள் எண். 2</u><br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2025 ஆம் மாதங்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.1194/2022/சி1</td><td>தீர்மானம் எண்,954<br>அலுவலகக்குறிப்பு<br>பார்வையிடப்பட்டு<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>17.10.2025</td><td><u>பொருள் எண். 3</u><br>இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1230.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 1 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் பதிக்கவும் விடுபட்ட கூடுதல் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு மின்னனு (E-Tender Online) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 20.08.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் (Technical Bid) தேர்வான ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளியினை (PRICE BID) 25.08.2025 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">வார்டு எண். 1 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பிரதான மற்றும பகிர்மான குழாய்கள் பதிக்கவும் விடுபட்ட கூடுதல் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு</td><td rowspan="2">1230.00</td><td>M/s.MPS Construction,<br>12, PattuKottai Kalyana Sundaram Street, Rangapalayam Road,<br>Erode 638 009.</td><td>மதிப்பீட்டை விட<br>0.05 % குறைவு</td></tr>
<tr><td>M/s.VSS and Construcation,<br>No.1-14-9M, Panchayat Office Road,Sankari,Salem.</td><td>மதிப்பீட்டை விட<br>0.40% அதிகம்</td></tr>
</table></td><td>நகரமன்ற தீர்மானம் எண் 955<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலககுறிப்பு</u><br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>ந.க.எண் .1395/2025/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>17.10.2025</td>
<td><u>பொருள் எண். 4</u><br>இராணிப்பேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025–26ன் கீழ் ரூ.166.00 இலட்சம் மதிப்பீட்டில் வாரசந்தை பகுதியில் Municicpal Multi Purpose Complex கட்டிடம் கட்டும் பணிக்கு மின்னனு (E-Tender Online) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 22.08.2025 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் (Technical Bid) தேர்வான ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளியினை (PRICE BID) 26.08.2025 அன்று திறக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">Construction of Commercial Complex (Near Weekly Shandy) in Ranipet Municipality.</td><td rowspan="2">166.00</td><td>திரு.பி..சிவசங்கர்,<br>நெ,45,ஓத்தவாடைத்தெரு,<br>2வது தளம், நவல்பூர்,<br>இராணிப்பேட்டை.</td><td>மதிப்பீட்டை விட<br>0.02 % குறைவு</td></tr>
<tr><td>திரு.எம்.புருஷோத்தமன்,<br>நெ.65,கம்மா பாளையம்,<br>சோளிங்கர் தாலுக்கா.</td><td>மதிப்பீட்டை விட<br>1.14% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>ந.க.எண் .735/2025/இ1</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண் 956<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>17.10.2025</td>
<td><u>பொருள் எண். 5</u><br>இராணிப்பேட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் Tied Grant 2023–2024 திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட தொகை போக மீதமுள்ள தொகைக்கு குடிநீர் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அனுமதியளித்துள்ளதை தொடர்ந்து 15வது மான்ய நிதியின் கீழ் மின்னனு (E-Tender Online) முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 20.08.2025 அன்று பெறப்பட்ட தேர்வான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றதில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம்</th></tr>
<tr><td>1</td><td>வார்டு எண்.27 காந்திநகர் மேல்நிலை நீர்த்தேக்க</td><td>19.00</td><td>திருமதி.ஆர்.செல்வராணி,<br>3/976 திருவள்ளுவர்</td><td>மதிப்பீட்டை விட<br>0.04 % குறைவு</td></tr>
</table></td>
<td>நகரமன்ற தீர்மானம் எண் 957<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | தொட்டியிலிருந்து பாதுகாப்பான குடிநீர் விநியோகிப்பதற்கு பழுதான வால்வை சரிசெய்து பராமரிப்பு பணிகள் செய்தல். | | நகர்,<br>நவ்லாக்,<br>புளியங்கண்ணு. | |
| | | | திரு.பி.புருஷோத்தமன்,<br>5/65, கம்மா பாளையம்,<br>சோளிங்கர் தாலுக்கா | மதிப்பீட்டை விட<br>0.60% அதிகம் |
| 2 | வார்டு எண்.11 ஜெயராம்பேட்டை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பாதுகாப்பான குடிநீர் விநியோகிப்பதற்கு பழுதான வால்வை சரி செய்து பராமரிப்பு பணிகள் செய்தல். | 9.50 | திருமதி.ஆர்.செல்வராணி,<br>3/976 திருவள்ளுவர் நகர்,<br>நவ்லாக்,<br>புளியங்கண்ணு. | மதிப்பீட்டை விட<br>0.06 % குறைவு |
| | | | திரு.பி.புருஷோத்தமன்,<br>5/65, கம்மா பாளையம்,<br>சோளிங்கர் தாலுக்கா | மதிப்பீட்டை விட<br>0.95 % அதிகம் |
| 3 | வார்டு எண்.04 நவல்பூர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பாதுகாப்பான குடிநீர் விநியோகிப்பதற்கு பழுதான வால்வை சரி செய்து பராமரிப்பு பணிகள் செய்தல். | 17.00 | திருமதி.ஆர்.செல்வராணி,<br>3/976 திருவள்ளுவர் நகர்,<br>நவ்லாக்,<br>புளியங்கண்ணு. | மதிப்பீட்டை விட<br>0.05 % குறைவு |
| | | | திரு.பி.புருஷோத்தமன்,<br>5/65, கம்மா பாளையம்,<br>சோளிங்கர் தாலுக்கா | மதிப்பீட்டை விட<br>0.69 % அதிகம் |
| 4 | 20HP நீர்மூழ்கி மோட்டார் மற்றும் ஸ்டார்டர் சப்ளை செய்திடும் பணி | 6.59 | திரு.கே.ஷண்முகபிரியன்,<br>நெ.42/5,தேவிநகர்,<br>3வது குறுக்கு தெரு,<br>ஆற்காடு. | மதிப்பீட்டை விட<br>0.09 % குறைவு |
| | | | திரு.எஸ்.எழில்வாணன்,<br>நெ.1/95எப்,பஜார் தெரு,<br>லாலாப்பேட்டை,வாலாஜா | மதிப்பீட்டை விட<br>1.15 % அதிகம் |

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண் .1817/2024/இ1

17.10.2025

**பொருள் எண். 6**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாலாறு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீருடனும், காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தில் பெறப்படும் குடிநீருடனும் பொது சுகாதாரம் கருதி பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஏதுவாக சோடியம் ஹைப்போ குளோரைடு லிக்யூட் நடப்பு ஆண்டிற்கு தேவைக்கேற்ப வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும், அதற்க்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதியளிக்கலாம்

2) மேற்படி பணிக்கான செலவினத்தினை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் . 1827/2025/இ1)

நகரமன்ற தீர்மானம் எண் 958 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

17.10.2025

**பொருள் எண். 7**

இராணிப்பேட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் UnTied Grant 2025-26 திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் அனுமதியளித்துள்ளதை தொடர்ந்து 15வது மான்ய நிதியின் கீழ் மின்னனு (E-Tender Online) முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 11.09.2025 அன்று பெறப்பட்ட தேர்வான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றதில் குறைவான ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வசந்தம் அவென்யூ மெயின் ரோடு 031003R0052, டீ கடை தெரு 031008R0111, டீ கடை தெரு 031008R0112, வைத்தியலிங்கம் சத்திரம் தெரு 031029R0180 மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 18.50 | திருமதி.ஆர்.செல்வராணி, 3/976 திருவள்ளுவர் நகர், நவ்லாக்,புளியங்கண்ணு. | மதிப்பீட்டை விட 0.04 % குறைவு |
| | | | டி.சி.ஐயப்பன், நெ.3/38, எஸ்.அக்ராஹாரம் குடிகுண்டா, திருத்தணி தாலுக்கா, திருவள்ளூவர் மாவாட்டம் | மதிப்பீட்டை விட 2.16% அதிகம் |
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட MGR தெரு 31009R0132, மாவட்ட ஆட்சியர் அலுவலக சென்டர் தெரு 031016R0233, சீயோன்நகர் 2வது சந்து 031016R0244, எல்லப்பன் தெரு 031026R0344 மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 21.50 | திருமதி.ஆர்.செல்வராணி, 3/976 திருவள்ளுவர் நகர், நவ்லாக்,புளியங்கண்ணு. | மதிப்பீட்டை விட 0.18 % குறைவு |
| | | | திரு.பி.புருஷோத்தமன், 5/65, கம்மா பாளையம், சோளிங்கர் தாலுக்கா | மதிப்பீட்டை விட 2.28 % அதிகம் |
| 3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட | 18.00 | திரு.பி.பழனி, | மதிப்பீட்டை விட |

நகரமன்ற தீர்மானம் எண் 959 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது ஏ

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>புதுதெரு 31006R0096, பழைய அஞ்சல் வீதி 031012R0191 பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி</td><td></td><td>302/2 தண்டலம் ரோடு,<br>வள்ளலார் நகர்,<br>இராணிப்பேட்டை</td><td>0.30 % குறைவு</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>டி.சி.ஐயப்பன்,<br>நெ.3/38, எஸ்.அக்ராஹாரம்<br>குடிகுண்டா,<br>திருத்தணி தாலுக்கா,<br>திருவள்ளுவர் மாவாட்டம்</td><td>மதிப்பீட்டை விட<br>2.07 % அதிகம்</td></tr>
<tr><td>4</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட டேங்க் தெரு 31010R0159, பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி</td><td>12.00</td><td>டி.சி.ஐயப்பன்,<br>நெ.3/38, எஸ்.அக்ராஹாரம்<br>குடிகுண்டா,<br>திருத்தணி தாலுக்கா,<br>திருவள்ளுவர் மாவாட்டம்</td><td>மதிப்பீட்டை விட<br>0.07 % குறைவு</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>திருமதி.ஆர்.செல்வராணி,<br>3/976 திருவள்ளுவர் நகர்,<br>நவ்லாக்,புளியங்கண்ணு</td><td>மதிப்பீட்டை விட<br>6.00 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br>
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>
ந.க.எண் .1817/2024/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>17.10.2025</td>
<td>
<u>பொருள் எண். 8</u><br>
இராணிபேட்டை நகராட்சி MBT ரோடில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. அரசாணை (நிலை) எண்.20, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.25.01.2025 உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு திட்டம் (I & A) –ன் கீழ் இப்பணிக்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்தில் ஒரு உணவகம் மற்றும் 30 கடைகள் கட்டப்பட்டு வருகிறது. இப் பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருவதை 05.09.2025–ம் தேதியன்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் நேராய்வு செய்தார்கள். இந்த நேராய்வின் போது உணவகம் மற்றும் கடைகளை வாடகைக்கு விட முன்கூட்டியே ஏலம் நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார்கள். அதற்கிணங்க ஏல அறிவிப்பு வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு ஒரு உணவகம் மற்றும் முப்பது கடைகளுக்கு ஒப்பந்த புள்ளி மற்றும் ஏல நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. பொருளில் குறிப்பிட்டுள்ள ஒரு உணவகம் மற்றும் மூப்பது கடைகள் கட்டி முடிப்பதற்கு முன்பாகவே வாடகைக்கு விட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல நடவடிக்கைக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி / ஏல பொறுப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை விவரங்கள் கீழ்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண் 960<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ.எண் | உணவகம் / கடைகள் கட்டிடம் அமைவிட விவரம் | கடை எண்கள் | தளம் | கடையின் அளவு சதுர அடியில் | ஒப்பந்தப்புள்ளி / ஏலப் பொறுப்புத் தொகை (கடை ஒன்றுக்கு) | கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| **1** | MBT **ரோட்டில் கட்டப்பட்டு வரும்** புதிய பேருந்து நிலைய **வளாகம்** | 1, 2 | தரை தளம் | 10x17 | ரூ.3,00,000/– | ரூ.3,00,000/– |
| | | 3,4,5,6,7,8, 9,10,11,12, 13,14,15,16,17,18,19,20, 21,22,23,24,25,26,27, 28, 29,30 | | 10x20 | ரூ.3,00,000/– | ரூ.3,00,000/– |
| | | **உணவகம் –1** | | 21x42 | ரூ.10,00,000/– | ரூ.10,00,000/– |

2 மேற்காணும் கடைகள் கட்டி முடிக்கப்படுவதற்கு முன்பாகவே ஏலம் விடுவதால் நகராட்சிக்கு பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டவுடனே வருவாய் கிடைக்கும்.

3. புதியதாக கட்டப்படும் கட்டிடங்கள் வாடகைக்கு விடுவது சம்மந்தமான அரசாணை (2ப) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந..நி.4) துறை, நாள்.06.08.2024–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது. எனவே, மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.1806/2025/அ3**

---

17.10.2025

**பொருள் எண். 9**.

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் டெங்கு காய்சல் பரவாமல் முன் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும், பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த மகளீர் குழு சுய உதவிக் குழுக்களை கொண்டு வீடு வீடாக சென்று அபேட் மருந்து தெளித்தல் வீடுகளை சுற்றியுள்ள தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துதல், முதிர்ச்சி அடைந்த கொசுகளை கட்டுபடுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள DBC பணியாளர்களை நியமித்து மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர், பொது சுகாதார பணிகள், இராணிப்பேட்டை அவர்களின் கடிதம் ந.க.எண்.355/அ2/2020, நாள்.07.07.2022ம் தேதியன்று தெரிவிக்கப்பட்டதற்கு 30 பணியாளர்களை கொண்டு தொடர் நடவடிக்கையாக மேற்கொண்டமைக்கு செப்டம்பர் 2025ம் மாதம் வரை மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, பொது மக்களின் நலன் கருதி இப்பணியினை அக்டோபர் 2025ம் மாதம் முதல் இதே சுய உதவிக்குழுவின் 30 DBC பணியாளர்களை கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர், இராணிப்பேட்டை அவர்களின் ந.க.எண்.F4/2369/2022, நாள்.13.05.2022 என்ற செயல்முறை ஆணையில் 2021–2022ம் வருடத்தில் தெரிவிக்கப்பட்ட வரிசை எண்.24ல் Mazdoor என்ற பணியிடத்திற்குண்டான தினக் கூலியாக ரூ.315/– என நிர்ணயம் செய்யப்பட்டதை ஏற்று இவற்றுடன் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் தெழிலாளர் மருத்துவ காப்பீடு சந்தா தொகைகளை செலுத்தி அக்டோபர் 2025 முதல் டிசம்பர் 2025 வரை மூன்ற மாதங்களுக்கு கீழ் காணும் விவரங்களின்படி ஊதியம் நிர்ணயம் செய்து வழங்க தோராயச் செலவினத் தொகை ரூ.6.65 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

நகரமன்ற தீர்மானம் எண் 961
அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| DETAILS ON DBC WORKERS EPF AND ESI | | | | |
|---|---|---|---|---|
| WAGES | EMPLOYEERS CONTRIBUTION | | EMPLOYEES CONTRIBUTION | |
| 2021-22 | EPF | ESI | EPF | ESI |
| Perday Wages | 13% | 3.25% | 12% | 0.75% |
| Rs.315.00 | Rs.40.95 | Rs.10.23 | Rs.37.80 | Rs.2.36 |
| Perday Contribution | Rs.51.18 | | Rs.40.16 | |
| Per Day Wages | Rs.366.18 | | Rs.274.84 | |

அலுவலக குறிப்பு

01. மன்றம் அனுமதி வழங்கலாம்.
02. இராணிபேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலியினை ஏற்று 30 DBC பணியாளர்களை கொண்டு டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மேலும் இவர்களுக்கு ஊதியம் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
03. இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1864/2022/எச்1

---

17.10.2025

**பொருள் எண். 10**

இந்நகராட்சியில் மாணவ/மாணவியர்கள் மற்றும் பொது மக்களுக்காக புதியதாக தொடங்கப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு ஒரு Librarian Cum Caretaker என்ற பணியிடத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.27968/2022/தி3, நாள் 05.02.2025ல் வெளிக்கொணவுர் முகமையின் மூலம் நியமிக்க தெரிவிக்கப்பட்டதில் ஒரு பணியாளர், மின்சார கட்டணம் மற்றும் இணையதள சேவை ஆகியவைகள் சேர்த்து ஓராண்டிற்கு ஆகும் மொத்த செலவினம் தோராயமாக ரூ.3,70,000/- என கணக்கிடப்பட்டு இதனை கல்வி நிதியில் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டமைக்கு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2447/2023/எ3, நாள் 04.01.2024ல் ஒப்பந்த அடிப்படையில் M/s.Reward Society, Villupuram என்ற நிறுவனத்தின் மூலம் ஒரு பணியாளருக்கு உண்டான மாத ஊதியத் தொகை ரூ..24,450/- யினை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் உத்தரவு மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் மாணவ/மாணவியர்கள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்க்காக உள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு தனியார் முகமையின் மூலம் பணியாளர் செலவினங்களை மேற்கொள்ள வேண்டி மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. இச்செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1252/2025/எப்1

நகரமன்ற தீர்மானம் எண் 962
அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 17.10.2025 | **<u>பொருள் எண். 11</u>**<br>இந்நகராட்சியில் பொறியியல் பிரிவிற்கு புதியதாக நியமிக்கப்பட்டுள்ள இரண்டு எண்ணிக்கை உதவி பொறியாளர்கள், இரண்டு எண்ணிக்கை ஓவர்சியர்கள், ஒரு வரைவாளர், மற்றும் மூன்று எண்ணிக்கை பணி ஆயவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர். மேற்படி பொறியியல் பிரிவில் ஒரு எண்ணிக்கை கணினி பிரிண்டர் வைக்க மேஜை, ஏற்கனவே கட்டிட ஆய்வாளர் இருந்த அறையில் மேஜை, நாற்காலி வசதி, மின்விசிறி மற்றும் இதர மின் உதிரி பொருட்கள் வாங்கி பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,10,000/-ற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண் . /2025/இ1) | நகரமன்ற தீர்மானம் எண் 963<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **<u>பொருள் எண். 12</u>**<br>இந்நகராட்சியின் 30 வார்டுகளில் உள்ள தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களை பிடித்து தடுப்பூசி (ARV) செலுத்த வேண்டியுள்ளதால் நாய்களை பிடிக்க பயன்படும் பட்டர்பிளைவ் வலைகளை வாங்க 20.05.2025ம் நாளில் நகர மன்றத்தின் முன் அனுமதி பெறப்பட்டமைக்கு, 20.05.2025ல் விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ் காணும் நிறுவனத்திடமிருந்து 04.06.2025ல் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதற்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><table><tr><td>வ.எண்</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>தொகை ரூ</td></tr><tr><td>01</td><td>MRC Enterprises, Chennai (Without GST 18%)</td><td>4850.00</td></tr><tr><td>02</td><td>D.K.Enterprises,Chennai (without GST 18%)</td><td>5200.00</td></tr><tr><td>03</td><td>Crescent Agencies, Chennai (without GST 18%)</td><td>5500.00</td></tr></table>**<u>அலுவலககுறிப்பு</u>**<br>01. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>02. இந்நகரத்தில் தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களை பிடிக்க பட்டர்பிளைவ் வலைகள் வாங்குவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வ.எண்.01ல் காணும் திருவாளர்.MRC Enterprises, Chennai என்பவர் குறைந்த விலைப்புள்ளி அளித்தமைக்கு மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று விநியோக உத்தரவினை வழங்கி நடவடிக்கைகள் மேறகொண்மைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண்.827/2025/எச்1 | நகரமன்ற தீர்மானம் எண் 964<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **<u>பொருள் எண். 13</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22 கிருஷ்ணகிரி டிரங்க் ரோடு சந்து மற்றும் வார்டு எண்.27 பகுதியில் புதியதாக சிறுபாலங்கள் அமைத்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.230000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>** | நகரமன்ற தீர்மானம் எண் 965<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கான செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1970/2025/இ1) | |
| 17.10.2025 | **பொருள் எண். 14**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 குவார்ட்டர்ஸ் தெரு மற்றும் வார்டு எண்.05 கிரேட் நகர் குறுக்கு சந்து பகுதியில் பகுதியில் புதியதாக சிறுபாலங்கள் அமைத்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.240000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கான செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1971/2025/இ1) | நகரமன்ற தீர்மானம் எண் 966 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண். 15**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.05 கிரேட் நகரில் அமைந்துள்ள பூங்காவிற்கு புதியதாக CCTV Camera பொருத்தவும் மற்றும் பழுதாகியுள்ள பைப்லைனை சரிசெய்து தண்ணீர் வசதி ஏற்படுத்த பழுது பார்த்து பராமரித்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ150000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கான செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண் .1972/2025/இ1) | நகரமன்ற தீர்மானம் எண் 967 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண். 16**<br>இந்கராட்சி எல்லைக்குட்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வார்டு எண்.19 புதுத்தெரு பகுதியில் குடிநீர் விநியோக பைப்லைன்அமைத்தல் மற்றும் வார்டு எண்.20 ஏஜென்ட் பெருமாள் சந்து பகுதியில் புதியதாக இரணடு வால்வுகள் பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.390000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கான செலவினம் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண் .1973/2025/இ1) | நகரமன்ற தீர்மானம் எண் 968 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண். 17** | நகரமன்ற தீர்மானம் எண் 969 |

இராணிப்பேட்டை நகராட்சியில் 79-வது சுதந்திர தின கொடி ஏற்று விழா 15.08.2025 அன்று கொண்டாடப்பட உள்ளது. கொடி ஏற்று விழவிற்கு முக்கிய பிரமுகர்கள், நகரமன்ற உறுப்பினர்கள் அழைக்கவும் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு அழைப்பிதழ்கள் நகராட்சியின் மூலம் அனுப்ப வேண்டியுள்ளது. எனவே, சுதந்திர தினவிழா அழைப்பிதழ்கள் (250 எண்ணிக்கை) அச்சடிக்கும் பணிக்கு தோராய செலவின தொகை ரூ.10,000/-க்கும் பணியின் அவசியம் கருதி மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள பகவான் பிரிண்டர்ஸ், இராணிப்பேட்டை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3) மேற்படி செலவினத்தினை 2025-2026ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.1794//2025/அ3

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

17.10.2025

**<u>பொருள் எண். 18</u>**

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இராணிப்பேட்டை அவர்களின் கடிதத்தில் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 பகுதியில் புதியதாக நியாய விலைக்கடை கட்டும் பணிக்கு மின்னனு (E-Tender Online) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 22.09.2025 அன்று பெறப்பட்ட தேர்வான ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றதில் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வரி சை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இராணிப்பேட்டை நகராட்சி வார்டு எண்.18 காரை பகுதியில் புதியதாக நியாயவிலைக்கடை கட்டும் பணி. | 19.00 | திரு. பி.விக்னேஷ்வரன், நெ.11,பி.வி.கே.தெரு, காரை,இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட -0.03 % குறைவு |
| | | | திரு. டி.சி.ஐயப்பன், நெ.3/38, எஸ்.அக்ராஹாரம் குடிகுண்டா,திருத்தணி தாலுக்கா,திருவள்ளுவர் மாவட்டம் | மதிப்பீட்டை விட +1.17% அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

ந.க.எண் .124/2025/இ1

நகரமன்ற தீர்மானம் எண் 970
அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

---

17.10.2025

**<u>பொருள் எண். 19</u>**

இராணிப்பேட்டை நகராட்சியில் 2022-23, 2023-24, 2024-25 மற்றும் 2025-26 ஆண்டுகளில்

நகரமன்ற தீர்மானம் எண் 971

<table>
<tr>
<td></td>
<td>நகராட்சியில் வெவ்வேறு திட்டங்களில் நடைபெற்று முடிந்துள்ள பணிகளுக்கு மூன்றாம் நபர் சரிபார்ப்பு சான்று (Third Party Verification Certificate ) செய்து வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் காணொலி ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளபடியாலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 08.05.2025ம் தேதிய நேரடி அறிவுரையின் படி நகரில் நடைபெற்று முடிந்த பணிகளுக்கும் மேற்படி மூன்றாம் நபர் சரிபார்ப்பு சான்று வாங்க வேண்டியும், அதற்காகும் உத்தேச செலவு தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>
(ந.க.எண் .136/2025/இ1)</td>
<td>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>17.10.2025</td>
<td><u>பொருள் எண். 20</u><br>
இராணிப்பேட்டை நகராட்சியில் பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணியினை மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.2235-2/2024/இ1 நாள் 14.08.2025ன் படி மின்னனு (E-Tender /Offline) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 02.09.2025 அன்று பெறப்பட்ட தேர்வான ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்றதில் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்ட டிப்பர் லாரி வாகனம் எண்.TN73 Q 9747 பழுதடைந்துள்ளதை சரிசெய்து தகுதிசான்று பெற்று வாகனத்தை மீண்டும் இயக்க செய்தல் பணி.</td><td rowspan="2">3.50</td><td>Lakshmi Industries,<br>Workshop Corner,<br>Bhavani Main Road,<br>Mettur Dam, Salem.</td><td>மதிப்பீட்டை விட 0.05 % குறைவு</td></tr>
<tr><td>Main Motors & Traders,<br>Thermal four Road,<br>Bavani Main Road,Mettu Dam.</td><td>மதிப்பீட்டை விட 0.22 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>
2. மேற்காணும் பணிக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>
<br>
ந.க.எண்.2235-2/2024/இ1</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண் 972<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>17.10.2025</td>
<td><u>பொருள் எண். 21</u><br>
இந்நகராட்சிக்குட்பட்ட MBT ரோட்டில் உள்ள திரு.எஸ்.ஆர்.கோவிந்தசாமி என்பவர் சொத்துவரி தொடர்பாக</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண் 973</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சி மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.21407/2017–ல் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் மீண்டும் மறு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதை தொடர்ந்து வழக்கினை நகராட்சிக்கு சாதகமாக வழிகாட்டுவதற்கு திரு.M.S.பிரேம்குமார், வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.25000/–னை வழங்க கோரியுள்ள கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1. மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>2. மேற்படி வழக்கு கட்டணம் ரூ.25000/–னை 2024–2025 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>ந.க.எண்.3063/2015/இ1 | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண். 22**<br>மாவட்ட ஆட்சித்தலைவர் இராணிப்பேட்டை அவர்களின் கடித ந.க.எண்.அ5/10509/2025 நாள் 18.09.2025–ன் படி இராணிப்பேட்டை மாவட்டத்தில் 03.10.2025 முதல் 12.10.2025 வரை புத்தக திருவிழா நடைபெறுவதால் அதனை நடத்துவதற்கான நிதி ஆதாரங்களை கொடையாளர்களிடமிருந்து பெறப்படும் நிதி, விளம்பரதாரர் மூலம் பெறப்படும் நிதி மற்றும் அரசின் பிறதுறை சார்ந்த நிதியினையும் கண்டறிந்து பயன்படுத்தலாம் என வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டுள்ளதன் அடிப்படையில் இராணிப்பேட்டை நகராட்சியின் சார்பாக ரூ.50000/–ஐ பங்கு தொகையாக இராணிப்பேட்டை மாவட்ட CSR Fund கணக்கில் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால் புத்தக திருவிழாவிற்கு பங்கு தொகையாக ரூ.50000/–னை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2.மேற்படி ரூ.50000/–ஐ கல்விநிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.<br>3.அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண் .2037/2025/இ1 | நகரமன்ற தீர்மானம் எண் 974<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண். 23**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 சீயோன்நகர் மற்றும் வார்டு எண்.20 சுப்பிரமணியர் கோயில் தெரு சந்து பகுதியில் புதியதாக சிறுபாலங்கள் அமைத்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.260000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கான செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1974/2025/இ1) | நகரமன்ற தீர்மானம் எண் 975<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **பொருள் எண். 24** | நகரமன்ற தீர்மானம் எண் 976 |

| | | |
|---|---|---|
| | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.14 டி.எம்.என்.தெருவில் சிறுபாலம் மற்றும் வார்டு எண்.23 அம்மன் கோயில் தெரு பகுதியில் இரண்டு எண்ணிக்கை சிறுபாலம் அமைத்திடும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.270000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1.மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கான செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1974-1/2025/இ1) | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 17.10.2025 | **<u>பொருள் எண். 25</u>**<br>இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தனியார் முகமையில் ஒப்பந்த அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு இரண்டாண்டு பணி நீடிப்பு செய்து இந்நகர தூய்மைப் பணிகள் மேற்கொள்ள 01.06.2023 முதல் திருவாளர். City Clean, Chennai என்ற நிறுவனத்திற்கு உத்தரவிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதில் கடந்த சில மாதங்களாக மேற்படி நிறவனத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உரிய காலத்திற்குள் ஊதியம் வழங்கப்படாமல் காலம் தவறி வழங்கி வருவதும் ஜீலை 2025ம் மாதத்திற்கும் இந்நாள் வரை பட்டியல்கள் மற்றும் மேற்படி பணியாளர்களுக்கு ஊதியமும் வழங்கப்படவில்லை. இந்நகரத்தில் சேகரமாகும் திடக்கழிவுகளை எவ்வித சுணக்கமின்றி தூய்மையாக வைத்திருக்க போதியளவில் பணியாளர்களை கடந்த ஜீலை 2025ம் மாதத்தில் ஈடுபடுத்தி பணிகளை மேற்கொள்ளவதற்கான Key performance indicatorல் குறிப்பிட்டுள்ளவாறு செயல்படுத்த ஒப்பந்ததாரரால் முடியவில்லை தினசரி பயன்பட வேண்டிய வாகனங்களான HCV -2க்கு ஒன்று, LCV 8-க்கு ஏழு, BOV-13க்கு 8 அல்லது 5 மற்றும் Pushcart 35க்கு 35 வாகனம் KPIல் குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பந்ததாரால் வாகனங்களை உரிய நேரத்தில் பழுதுகளை நிவர்த்தி செய்து இயக்க முடியவில்லை இதானல் திடக்கழிவுகளை எடுக்க முடியாமல் நகரில் தேக்கநிலை உள்ளது. 27.07.2025ம் நாளில் இவைகளை குறித்து இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நேரடியாக ஒப்பந்ததாரருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு இதனை ஏழுதினங்களுக்குள் நிவர்த்தி செய்யப்படவேண்டும் என தெரிவித்து உத்தரவிடப்பட்டது. மேலும், இவைகள் குறித்து இவ்வலுலவகத்தின் 30.07.2025ம் நாளில் அறிவிப்பு கடிதம் சார்வு செய்யப்பட்டு இந்நாள் வரை எவ்விதமுன் ஏற்பாடுகள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்ய ஒப்பந்ததாரரால் இயலவில்லை. மேலும், 25.07.2025 நாளிட்ட காரணம் கோட்கும் குறிப்பாணைக்கு 01.08.2025ம் நாளில் தொடர்ந்து எங்களால் இந்த ஒப்பந்த தொகைக்கு பணிமேற்கொள்ள முடியவில்லை என தெரிவித்து 15.08.2025ம் தேதி வரை நிறுவனத்தின் மூலம் தூய்மை பணிகள் மேற்கொண்டு பணியினை கைவிடுதாக தெரிவித்துவிட்டனர். எனவே, நிர்வாக நலன் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி Key performance indicatorல் குறிப்பிட்டுள்ள காரணிகளின்படி ஒப்பந்ததாரரால் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாமைக்கு 15.08.2025 நாள் வரை பணிகள் மேற்கொண்டு திருவாளர். City Clean, Chennai என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள பணி ஆணையினை ரத்து செய்து உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>01. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>02. தூய்மைப் பணியாளர்களுக்கு உரிய நேரத்தில் ஊதியம் வழங்கப்படாமை மற்றும் Key performance indicatorல் குறிப்பிட்டுள்ள காரணிகளின் படி திருவாளர் City Clean, Chennai என்ற நிறவனத்தால் பணிகள் மேற்கொள்ள | நகரமன்ற தீர்மானம் எண் 977<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இயலாமையின் காரணமாக பலமுறை இதுகுறித்து அறிவிப்புகள் அனுப்பியும் எவ்வித முன்னேற்பாடுகளும் ஏற்படாத காரணத்தினால் 01.08.2025ம் தேதியில் ஒப்பந்ததாரர் நேரில் என்னால் இனிவரும் காலங்களில் தொடர முடியாது என தெரிவிக்கப்பட்டமைக்கு நிர்வாக நலன் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி ஒப்பந்த உடன்படிக்கையின் மூலம் வழங்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்து உத்தரவிட மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண்.1967/2021/எச்1 | |
| 17.10.2025 | **பொருள் எண். 26**<br>இராணிப்பேட்டை நகராட்சி வாரச்சந்தை மைதானத்தில் தினசரி மார்கெட் மொத்த விற்பனை கடைகள் மற்றும் சில்லரை விற்பனை கடைகள் கட்டும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. அரசாணை( நிலை) எண். G.O (4D) No.23 MAWS (SS & FC) Department, Dated 01.02.2022–ன்படி கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் ( KNMT) 2022–2023 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இந்தவாரச் சந்தை பகுதியில் புதியதாக 60 விற்பனை கடைகள் கட்டி முடிக்கப்பட்டு அதற்கான ஏலம் நடைபெற்று வருகிறது. மேலும், சில்லைரை விற்பனை கடைகளுக்கான 8x 8 அளவுகளில் 300 எண்ணிக்கை கடைகள் 6 பிளாக்குகளாக கட்டப்பட்டு பணி முடியும் தருவாயில் உள்ளது. மேற்படி கடைகளை வாடகைக்கு விட முன்கூட்டியே ஏலம் நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அறிவுருத்தப்பட்டுள்ளது . எனவே, கீழ்கண்டுள்ளவாறு சில்லரை விற்பனை கடைகளுக்கு ஒப்பந்தபுள்ளி மற்றும் ஏலநடடிவக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண் 978<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | கட்டிடம்அமைவிட விவரம் | கடை எண்கள் | தளம் | ஒப்பந்தப்புள்ளி /ஏலப்பொறுப்புத் தொகை (கடை ஒன்றுக்கு) | கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வாரச்சந்தை மைதானத்தில் சில்லரை விற்பனை கடைகள் | பிளாக் 1 (50 கடைகள்) | தரைதளம் | ரூ.1500000/– | ரூ.10,00,000/– |
| 2 | வாரச்சந்தை மைதானத்தில் சில்லரை விற்பனை கடைகள் | பிளாக் 2 (50 கடைகள்) | தரைதளம் | ரூ.1500000/– | ரூ.10,00,000/– |
| 3 | வாரச்சந்தை மைதானத்தில் சில்லரை விற்பனை கடைகள் | பிளாக் 3 (50 கடைகள்) | தரைதளம் | ரூ.1500000/– | ரூ.10,00,000/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | வாரச்சந்தை மைதானத்தில் சில்லரை விற்பனை கடைகள் | பிளாக் 4 (50 கடைகள்) | தரைதளம் | ரூ.1500000/- | ரூ.10,00,000/- |
| 5 | வாரச்சந்தை மைதானத்தில் சில்லரை விற்பனை கடைகள் | பிளாக் 5 (50 கடைகள்) | தரைதளம் | ரூ.1500000/- | ரூ.10,00,000/- |
| 6 | வாரச்சந்தை மைதானத்தில் சில்லரை விற்பனை கடைகள் | பிளாக் 6 (50 கடைகள்) | தரைதளம் | ரூ.1500000/- | ரூ.10,00,000/- |

**அலுவலககுறிப்பு**

1. பொருளில் குறிப்பிட்டுள்ள சில்லரை விற்பனை கடைகளுக்கு கட்டி முடிப்பதற்கு முன்பாகவே வாடகைக்கு விட ஒப்பந்தபுள்ளி மற்றும் ஏல நடவடிக்கைக்கான நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளி / ஏலபொறுப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் கடைகள் கட்டி முடிக்கப்படுவதற்கு முன்பாகவே ஏலம் விடுவதால் நகராட்சி வாரச்சந்தை சில்லரை விற்பனை கடைகள் கட்டி முடிக்கப்பட்டவுடனே வருவாய் கிடைக்கும்.
3. புதியதாக கட்டப்படும் கட்டிடங்கள் வாடகைக்கு விடுவது சம்மந்தமானஅரசாணை (2u) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்.06.08.2024-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது. எனவே மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண். /2025/அ3

17.10.2025

**பொருள் எண். 27**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 சீனிவாசன்பேட்டை பகுதியில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்திற்கு புதியதாக கழிவு நீர் தொட்டி கட்டும் பணிக்கு தோராய செலவினம் ரூ.2,00,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1) மன்றம் அனுமதியளிக்கலாம்
2) மேற்படி பணிக்கான செலவினம் பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் .1974/2025/இ1)

நகரமன்ற தீர்மானம் எண் 979 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

17.10.2025

**பொருள் எண். 28**

இராணிப்பேட்டை நகராட்சியில் பணிபுரியம் பணியாளர்களுக்கு பண்டிகைகளை சிறப்பாக கொண்டாடும் வகையில் ஏற்கனவே ரூ.10000/-னை பண்டிகை முன்பணமாக வழங்கப்பட்டிருந்தது, அரசாணை நிலை G.O.Ms.240, Finance (Salaries) Department, Dated 02.08.2019-ன் படி தற்போது ரூ.20,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

நகரமன்ற தீர்மானம் எண் 980 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

2. பணியாளர்களுக்கு வழங்கும் முன்பண தொகையினை இந்நகராட்சி பொதுநிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1933/2025/அ3)

17.10.2025

**பொருள் எண். 29**

இந்நகராட்சிக்கு சொந்தமான வண்டிமேட்டு தெரு கடை எண்.31, 01.04.2025 முதல் காலியாக உள்ளது. மேற்படி கடையினை 03.07.2025, 17.07.2025 மற்றும் 13.08.2025 மூன்று முறை ஏலம் விடப்பட்டும் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. மேலும், திரு.T.ஹரிசுதன் என்பவர் மேற்படி கடைக்கு வாடகை அதிகமாக உள்ளதால் கடையினை நான்காக பிரித்து ஏலம் விட விண்ணப்பம் அளித்துள்ளார். எனவே, மேற்படி கடையின் மொத்த அளவு 1440 சதுர அடியாக உள்ளது. கீழ்கண்டுள்ளவாறு நான்கு கடைகளாக பிரித்து ஏலம் விடுவதினால் நகராட்சிக்கு வருவாய் ஏற்படும்.

| வ.எண் | கடை எண் | அளவு |
|---|---|---|
| 1 | 31A | 262 ச.அ |
| 2 | 31B | 160 ச.அ |
| 3 | 31C | 160 ச.அ |
| 4 | 31D | 160 ச.அ |

எனவே மேற்கண்டுள்ளவாறு கடையினை நான்காக பிரித்து இந்நகராட்சியின் பொறியாளரால் நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகை அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | கட்டிடம் அமைவிட விவரம் | கடை எண்கள் | தளம் | ஒப்பந்தப்புள்ளி/ ஏலப்பொறுப்புத் தொகை (கடை ஒன்றுக்கு) | கூடுதல் வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வண்டிமேட்டுத் தெரு | 31A | தரைதளம் | ரூ.1,50,000/- | ரூ.50,000/- |
| 2 | வண்டிமேட்டுத் தெரு | 31B, 31C, 31D | தரைதளம் | ரூ.1,50,000/- | ரூ.50,000/- |

**அலுவலக குறிப்பு**

1. பொருளில் குறிப்பிட்டுள்ள வண்டிமேட்டு கடைகள் வாடகைக்கு விட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல நடவடிக்கைக்கான நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி / ஏலபொறுப்பு தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை மன்றம் அனுமதிக்கலாம்.
2. புதியதாக கட்டப்படும் கட்டிடங்கள் வாடகைக்கு விடுவது சம்மந்தமான அரசாணை (2u) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள் 06..08.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது. எனவே மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.1988/2025/அ3

நகரமன்ற தீர்மானம் எண் 981
அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

17.10.2025

**பொருள் எண். 30**

நகரமன்ற தீர்மானம்

இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் நகர தூய்மைப் பணிக்கு TN73Q9749 என்ற கனரக வாகனம் பழுதடைந்துள்ளதால் தினசரி சேகரமாகும் கழிவுகளை எடுப்பதில் சிரமமாக உள்ளதினாலும் உள்ளூர் டிராக்டர் மற்றும் ட்ரெய்லர் வாகன உரிமையாளர்களிடம் விலைப்புள்ளி கோரி வாகனத்தை தினசரி வாடகைக்கு எடுத்து பயன்படுத்திக்கொள்ள வேண்டி அவசர அவசிய பொது மக்களின் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இந்நகராட்சியில் கனரக வாகனம் பழுதடைந்துள்ளதால் தினசரி சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை எடுத்து நுண்ணுரமையங்களுக்கு எடுத்து செல்வதில் மிக சிரமமாக உள்ளதினால் தினசரி வாடகை ஏற்பாட்டின் மூலம் டிராக்டர் மற்றும் ட்ரெய்லர் வாகனத்தினை விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கையினை மூலம் பயன்படுத்திக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. இச்செலவினத்தை வருவாய் நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.827/2025/எச்1

எண் 982
அலுவலகக்குறிப்பு
அனுமதிக்கப்பட்டது

17.10.2025

**<u>பொருள் எண். 31</u>**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாணமைத் திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் நகர தூய்மைப் பணிகளை மேற்கொண்டு வந்த திருவாளர்.City Clean, Chennai நிறுவனம் 15.08.2025 வரை நடத்தி 16.08.2025 அன்று முதல் பணியினை ரத்து செய்யப்பட்டதால் இந்நகராட்சியின் நிர்வாக நலன் மற்றும் பொது மக்களின் நலன் கருத்தில் கொண்டு 07 சுய உதவிக் குழுக்களின் மூலம் 122 தூய்மைப்பணியாளர்கள் மற்றும் 09 ஓட்டுநர்களை தொடர்ந்து தூய்மைப் பணியில் ஈடுபடுத்த வேண்டி இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.எப்4/4092/2024, நாள் 07.06.2024ல் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வ.எண்.63 தூய்மைப் பணியாளர் தினக்கூலியாக ரூ.421/- மற்றும் வ.எண்.35 ஓட்டுநர் தினக் கூலி ரூ.493/- யினை நிர்ணயம் செய்து இத்துடன் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் தொழிலாளர் மருத்துவ காப்பீடு சந்தாகளை சேர்த்து கீழ்காணும் பட்டியலில் உள்ளாறு 16.08.2025 முதல் 30.11.2025 வரை அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவ்டிக்கைகள் எடுக்கும் வரை பணியில் ஈடுபடுத்திக் கொள்ள தோராயச் செலவினத் தொகை ரூ.70.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| DETAILS OF CLENALINESS WORKER EPF AND ESI | | | | |
|---|---|---|---|---|
| WAGES | EMPLOYEERS CONTRIBUTION | | EMPLOYEES CONTRIBUTION | |
| 2024-2025 | EPF | ESI | EPF | ESI |
| Perday Wages | 13% | 3.25% | 12% | 0.75% |
| Rs.421.00 | 54.73 | 13.68 | 50.52 | 3.15 |
| Per dau Contribution | 68.41 | | 53.67 | |
| Per day wages | 489.41 | | 367.33 | |

நகரமன்ற தீர்மானம்
எண் 983
அலுவலகக்குறிப்பு
அனுமதிக்கப்பட்டது

| DETAILS ON DRIVER EPF AND ESI | | | | |
|---|---|---|---|---|
| WAGES | EMPLOYEERS CONTRIBUTION | | EMPLOYEES CONTRIBUTION | |
| 2024-2025 | EPF | ESI | EPF | ESI |
| Perday Wages | 13% | 3.25% | 12% | 0.75% |
| Rs.496.00 | 64.48 | 16.12 | 59.52 | 3.72 |
| Per day Contribution | 80.60 | | 63.24 | |
| Per day wages | 576.60 | | 432.76 | |

**அலுவலக குறிப்பு:**

01. மன்றம் அனுமதி வழங்கலாம்.
02. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் இந்நகர தூய்மைப்பணிகள் மேற்கொண்டு வந்த ஒப்பந்தாரர் 15.08.2025 வரை பணிகள் மேற்கொண்டு ரத்து செய்யப்பட்ட நிர்வாக நலன் மற்றும் பொது மக்களின் நலன் கருதி இந்நகர தூய்மைப்பணிகளை எவ்வித சுணக்கம் ஏற்படா வண்ணம் நான்கு மாதங்களுக்கு அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வரை உதவி குழுக்களின் மலம் தொடர்ந்து தூய்மைப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
03. சுய உதவிக் குழுக்களின் மூலம் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்கான சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பின்னேர்பு பெற்றிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
04. இச்செலவினத்தை வருவாய் நிதி/15வது ஆணைய நிதி/திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1549/2025/எச்1

17.10.2025

**<u>பொருள் எண். 32</u>**

இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தூய்மை பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வந்த திருவாள்ர.City Clean Chennai என்பவர் பணியினை 15.08.2025ல் கைவிடப்பட்டதால் பொது மக்களின் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி 16.08.2025 முதல் தூய்மைப் பணியாளர்கள் 122 மற்றும் ஓட்டுநர் 09 தேவைக்கு கீழ் காணும் 07 சுயஉதவிக்குழுகள் விருப்பம் தெரிவிக்கப்பட்டதால் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட விதிகள் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.எப்4/4092/2024, நாள் 07.06.2024ன் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வ.எண்.63ல் தூய்மைப் பணியாளரின் தினக்கூலி ரூ.421/- மற்றும் வ.எண்.35ல் ஓட்டுநரின் தினக்கூலி ரூ.493/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொகையுடன் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிர்வாக பங்கு தொகை 13 சதவீதம் மற்றும் தொழிலாளர் மருத்துவ காப்பீட்டு நிர்வாக பங்கு தொகை 3.25 சதவீதத்துடன் சேர்த்து கீழ் காணும் பட்டியலில் உள்ளவாறு ஒரு நாள் தினக்கூலியாக நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரி நடவடிக்கைகள் எடுக்கும் நாள் நிபந்தனைகள் உட்பட்டு பணியில் ஈடுத்திக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | சுயஉதவிக்குழுக்களின் பெயர்கள் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|

நகரமன்ற தீர்மானம் எண் 984
அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>01</td><td>முல்லை மகளீர் சுயஉதவிக்குழு, இராணிப்பேட்டை</td><td>20 தூய்மை பணியாளர்கள்</td></tr>
<tr><td>02</td><td>குறிஞ்சி மகளீர் சுய உதவிக்குழு, இராணிப்பேட்டை</td><td>13 தூய்மை பணியாளர்கள்</td></tr>
<tr><td>03</td><td>உதயன் ஆண்கள் சுயஉதவிக்குழு, இராணிப்பேட்டை</td><td>10 தூய்மை பணியாளர்கள்<br>06 ஓட்டுநர்கள்</td></tr>
<tr><td>04</td><td>மருதம் மகளீர் சுய உதவிக்குழு, இராணிப்பேட்டை</td><td>20 தூய்மை பணியாளர்கள்</td></tr>
<tr><td>05</td><td>இமயம் மகளீர் சுய உதவிக்குழு, இராணிப்பேட்டை</td><td>18 தூய்மை பணியாளர்கள்</td></tr>
<tr><td>06</td><td>கதிரவன் ஆண்கள் சுய உதவிக்குழு, இராணிப்பேட்டை</td><td>20 தூய்மை பணியாளர்கள்</td></tr>
<tr><td>07</td><td>நெய்தல் மகளீர் சுய உதவிக்குழு, இராணிப்பேட்டை</td><td>18 தூய்மை பணியாளர்கள்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
01. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
02. பொது மக்களின் நலன் மற்றும நிர்வாக நலன் கருதி திடக்கழிவு மேலாணமைத் திட்டப் பணிக்கு 16.08.2025 முதல் மறு ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கைகள் எடுக்கும் நாள் வரை மேற்காணும் 07 சுய உதவிக்குழு பணியாளர்களை கொண்டு இந்நகராட்சியின் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள செயல்முறை உத்தரவு மயார் செயய்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.1549/2025/எச்1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>17.10.2025</td>
<td>
<u>பொருள் எண். 33</u><br>
மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் வழக்கு எண்.WP.No.23289/2025 என்ற இந்நகராட்சிக்கு எதிரான வழக்கிற்கு 27.06.2025ம் நாளில் தீர்ப்புரை பெறப்பட்டமைக்கு இந்நகராட்சியின் சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.சுந்தரம் அவர்களால் வாதுரை மேற்கொள்ளப்பட்டது. எனவே, இவ்வழக்கிற்கான செலவின தொகை ரூ.30,000/- மற்றும் சட்ட கருத்துருவிற்கான தொகை ரூ.10,000/-ஆக மொத்தம் ரூ.40,000/-ஐ வழங்குமாறு கடிதத்தின் மூலம் கோரியுள்ளதற்கு திரு.E.சுந்தரம் சென்னை அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு மேற்காணும் வழக்கு செலவினத் தொகையினை வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
01. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
02. மேற்காணும் வழக்கு செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
ந.க.எண்.0442/2024/எச்1
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண் 985 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>17.10.2025</td>
<td><u>மேஜை மன்ற பொருளாக வைக்கப்படுகிறது</u></td>
<td></td>
</tr>
<tr>
<td>17.10.2025</td>
<td>
<u>பொருள் எண். 35</u><br>
வருவாய் பேரிடர் மேலாண்மை {LD-1(1)}துறை அரசாணை நிலை எண் . 97 , நாள். 21.02.2025 -ல் மாவட்ட தலைநகரங்கள் , மாநகராட்சிகள் , நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய நகர்புற உள்ளாட்சி அமைப்பிகளிலிருந்து 16/8 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் அமைந்துள்ள ஆட்சேபனையில்லா புறம்போக்குகளில் உள்ள குடியிருப்பு உபயோக ஆக்கிரமிப்புகளை ஒரு முறை விளக்களிப்பு அடிப்படையில் வரன்முறைப்படுத்திட
</td>
<td>நகரமன்ற தீர்மானம் எண் 987 மன்றப்பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் 5 ஆண்டுகளுக்கு</td>
</tr>
</table>

ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வகுத்து ஆணையிடப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இராணிப்பேட்டை மாவட்டம் , வாலாஜா வட்டம் , இராணிப்பேட்டை நகரம் , வார்டு : B , பிளாக் : 19, நகர புல எண். 1–ன்பரப்பு 0.1450 ச.மீஅரசுபுறம்போக்குவகைப்பாடுரோடு, வார்டு : B , பிளாக் : 19, நகர புலஎண்.2–ன்பரப்பு 0.3280 ச.மீஅரசுபுறம்போக்குவகைப்பாடுரோடு, வார்டு : B , பிளாக் : 17, நகர புல எண். 16– ன்பரப்பு 0.1130 ச.மீஅரசுபுறம்போக்குவகைப்பாடுபாட்டை ,ஆகிய வகைப்பாடுகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமனம் செய்து வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு நகர்புற இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் வீட்டுமனை பட்டா வழங்க உள்ளதால் நகராட்சி தீர்மானம் இயற்றி தருமாறு கோரி வட்டாட்சியர் , வாலாஜா அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள 03.10.2025 தேதிய ந. க. ஆ4/4234/2025, எண்ணிட்டகடிதம் அடிப்படையில் ஆட்சேபனையில்லா கடிதம் அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு :**

வட்டாட்சியர் , வாலாஜா அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள 03.10.2025 தேதிய ந. க. ஆ4/4234/2025, எண்ணிட்டகடிதத்தில் குறிப்பிட்டிருந்த நகர புல எண்கள் வாரியாக பட்டா வழங்குதலில் உள்ள நடைமுறை சாதியக்கூறுகள் / இடர்பாடுகள் குறித்து விவரம் கீழ்கண்ட பட்டியலில் தரப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண். | பிளாக் எண். | நகர புல எண். | நில வகைப்பாடு | குறிப்பு / பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| 1. | B | 19 | 1 | ரோடு | ஆக்கிரமிப்பு செய்துள்ளது போகபோக்குவரத்துஉபயோகத்திற்கு போதுமான இடம் உள்ளதால் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். |
| 2. | B | 19 | 2 | ரோடு | |
| 3. | B | 17 | 16 | பாட்டை | |

இதனை கருதி வருவாய் பேரிடர் மேலாண்மை {LD–1(1)}துறை அரசாணை நிலை எண் . 97 , நாள். 21.02.2025 –ல் குறிப்பிட்டுள்ளவாறு ஆட்சேபனையில்லா புறம்போக்குகளில் உள்ள குடியிருப்பு உபயோக ஆக்கிரமிப்புகளை ஒரு முறை விளக்களிப்பு அடிப்படையில் வரன்முறைப்படுத்திட அரசு ஏழை மக்களின் நலனுக்காக இந்த திட்டத்தினை கொண்டு வந்துள்ளதை கருதி , மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் பின்பற்றி 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமனம் செய்து வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க உள்ளதால் மன்றம் முடிவு செய்யலாம் .

<u>ந.க. எண் . 453 /2025 / எப்1.</u>

மேலாக ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க மன்ற ஒப்புதல் அளித்து திர்மானிக்கப்பட்டது

(ஒம்/ – க. சுஜாதாவினோத்)
நகரமன்றத் தலைவர்,
இராணிப்பேட்டை நகரமன்றம்.